# யா/ நவாலி மகா வித்தியாலயம்

## வருடாந்த பரிசளிப்பு விழா

## 2016





### தலைவர்

**திரு. த. மாதவன்** (அதிபர்)

### பிரதம விருந்தினர்

**திரு. பா. கஜதீபன்**

(கௌரவ மாகாணசபை உறுப்பினர், வடக்கு மாகாணம்)

### சிறப்பு விருந்தினர்கள்

**திரு. ச. சிவானந்தராஜா**

(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

**கலாநிதி. செ. சந்திரசேகரம்**

(முதுநிலை விரிவுரையாளர், பொருளியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

### கௌரவ விருந்தினர்

**திருமதி. சுரேஜினி சந்திரசேகரம்**

(பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்,
மாகாண கணக்காய்வுத் திணைக்களம், வடமாகாணம்)

### நிறுவுநர் நினைவுப் பேருரை

**திரு. ச. ரவீந்திரா**

(முகாமையாளர், வடபிராந்தியம், DFCC வங்கி)

# மகுட வாசகம்

"கற்றாங் கொழுகுக"

# தூரநோக்கு

பாடசாலை நிறுவனத்தால் பெறக்கூடிய மனித வள அபிவிருத்தியைப் பூரணமாகவும், சிக்கனமாகவும், உச்ச பயனுடனும் பயன்படுத்தி அறிவு, தகவல்தொழினுட்ப நூற்றாண்டுடன் இணைவோம்.

# இலக்கு

அறிவு, திறன், மனப்பாங்கு ஊழியர்களை உள்ளடக்கும் மனிதவள அபிவிருத்தி ஊடாக பொருளாதாரப் பரிமாணம் கொண்ட விஞ்ஞான தொழினுட்பத்துறைகளில் பயனுடைய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பாடசாலைப் பற்று தேசப்பற்றுள்ள மனிதவளத்தை உருவாக்கல்.

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினரை அழைத்து வருதல்
- தேசியக் கொடி, பாடசாலைக் கொடியேற்றல்
- மாலை அணிவித்தல் - (ஸ்தாபகர், புலவர் சிலைகள்)
- விருந்தினர்களை விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- நிறுவுநர் நினைவுப் பேருரை
- அதிபர் அறிக்கை
- கௌரவ விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- கலை நிகழ்ச்சிகள்
- பாடசாலைக் கீதம்

# அதிபர் அறிக்கை

இன்று எமது வித்தியாலயம் வருடாந்த பரிசளிப்பு விழாவையும் நிறுவுனர் நாளையும் கொண்டாடி மகிழ்கின்றது. இதற்கு அனுக்கிரகம் புரிந்த இறைவனை வணங்கி நின்று, இன்றைய விழாவுக்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு எம்மைக் கௌரவித்துக் கொண்டிருக்கும் கௌரவ வடமாகாணசபை உறுப்பினர் **திரு. பா. கஜதீபன் அவர்களே**, சிறப்பு விருந்தினர் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் **திரு. ச. சிவானந்தராஜா** அவர்களே, கௌரவ விருந்தினர் **திருமதி. ச. சுரேஜினி** அவர்களே, நிறுவுனர் நினைவுப் பேருரையாளர் **திரு. ச.** ரவீந்திரா அவர்களே, மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர், SDC உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

கௌரவ மாகாணசபை உறுப்பினர் திருவாளர் கஜதீபன் அவர்களே. தங்களது பொன்னான நேரத்தை எங்களுக்கென ஒதுக்கிப் பிரதம விருந்தினராக வருகை தந்து எம்மைக் கௌரவப்படுத்திக் கொண்டிருக்கும் தங்களை வருக வருக என வரவேற்கின்றேன்.

அடுத்து சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. சிவானந்தராஜா அவர்களையும் பேராசிரியர் கலாநிதி செ. சந்திரசேகரம் அவர்களையும் பாடசாலை சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மதிப்புக்குரிய திருமதி. சந்திரசேகரம் அவர்களே, எமது மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பரிசில் தின விழாவில் தரம் - 5, தரம் - 11, தரம் - 12 ஆகியவற்றில் திறமையான மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி உட்பட பெறுமதியான பணப்பரிசில்களை வழங்கி வருகின்ற தங்களை மகிழ்வுடன் வரவேற்று நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

வர்த்தன வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மதிப்புக்குரிய திரு. ச. ரவீந்திரா அவர்களே, எமது வித்தியாலயத்தில் வருடந்தோறும் நிறுவுனர் நினைவுப் பேருரை நிகழ்த்தி வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

நிறுவுநர் பண்டிதர் தம்பையா அவர்களின் வழித்தோன்றலான தங்களை வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

இவ் வித்தியாலயத்தில் அதிபராக இறுதியாக சேவையாற்றி ஓய்வு பெற்ற திரு. R. வசந்தகுமார் அவர்களைத் தொடர்ந்து கடந்த வருடம் இவ்வித்தியாலயத்தை நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். நூற்றாண்டு விழா கண்ட இவ்வித்தியாலயம் இன்று மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனை மீண்டும் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்வதற்கு என்னால் முடிந்தளவு முயற்சி செய்வேன் எனக் கூறிக்கொண்டு எமது வித்தியாலயத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு என்னுடன் இணைந்து செயற்படும் பிரதி அதிபர் திருமதி. K. ரவீந்திரன் மற்றும் நிர்வாகக் கடமைகளில் ஒத்துழைப்பு நல்கும் ஆசிரியர்களான திரு. S. நேதாஜி, திருமதி. S. இராஜசேகரம், திரு. N. கோபாலகிருஷ்ணன், திருமதி. S. ஆனந்தராஜ், திருமதி. J. செந்தூரன், திருமதி. P. பற்றிக்குணசீலன், திரு. C. N. விக்னேஸ்வரன், திரு. ப. அன்பழகன் ஆகியோருக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகாமைத்துவக் கடமைகளில் நிதி விடயங்களைப் பொறுப்புடன் பராமரித்துக் கணக்குகளைச் சரியான முறையில் கையாண்டு சீரான முறையில் பதிவுகளை மேற்கொள்ளும் ஆசிரியரான திருமதி. S. ஆனந்தராஜ் அவர்களுக்கும், ஆசிரிய, மாணவ உயர்மட்டச் செயற்பாடுகளுக்கும் உளவளத்துறைக்கும் பொறுப்பாகவுள்ள திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமார் அவர்களுக்கும் எனது நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

அடுத்து உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர் லீவு விடயத்துக்கும் பொறுப்பான ஆசிரியராக திருமதி. J. செந்தூரன், உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களான திரு. R. மன்மதராஜன், திரு. N. கோபாலகிருஷ்ணன் ஆகியோரையும் பாராட்டுகின்றேன். விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான ஆசிரியரான திருமதி. S. பிரபதாஜ் அவர்கள் பல்வேறு மட்டங்களில் நடைபெறும் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று வெற்றி பெற வைத்துப் பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். இவ் ஆசிரியரைப் பாராட்டுவதுடன் நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான மதிய உணவுச் செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கொள்ளும் ஆசிரியரான திரு. க. ஹம்சன் அவர்களுக்கும் பெண் சாரணியத்துக்கும் பொறுப்பாகவுள்ள விஞ்ஞான பாட ஆசிரியரான திருமதி. S. விஜயநேசன் அவர்களுக்கும் எனது நன்றிகள். வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் காலைக்கூட்டத்தை ஆங்கில மொழியில் நடாத்தி மாணவர்களின் ஆங்கில மொழியறிவை விருத்தி செய்யும் ஆசிரியர்களான திருமதி. R. ஈஸ்வரன், திருமதி. N. தனரஞ்சன் ஆகியோரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

மனைப்பொருளியல் பாடத்தைக் கற்பிக்கும் சிரேஷ்ட ஆசிரியரான திருமதி. R. சிவபாலன் அவர்கள் விழாக்களின்போது விருந்துபசாரங்களைச் சிறப்பாக நெறிப்படுத்தி வருகின்றார். இவரையும் கணிதபாட ஆசிரியரான திருமதி. S. ரமேஷ் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பாடசாலை விழாக்களில் கலை நிகழ்வுகளை நெறிப்படுத்தும் சங்கீத பாட ஆசிரியரான திருமதி. G. ஜெகநாதன், நடன பாட ஆசிரியரான திருமதி. ம. மனோகரன் அவர்களையும் விவசாய பாட ஆசிரியரான திரு. T. பாலகுமார் அவர்களையும் தகவல் தொழினுட்ப ஆசிரியரான திரு. பராபரன் அவர்களையும் பாராட்டுகின்றேன். சித்திர கலைப்பாடத்தைக் கற்பித்து வந்த ஆசிரியரான திரு. S. நேதாஜி அவர்கள் அதிபர் தரம் III பரீட்சையில் சித்தியெய்தி அதிபராக பதவியுயர்வு பெற்றுள்ளார். அவர் மேலும் பல பதவிகளைப் பெற வாழ்த்துகின்றேன். தற்காலிக இடமாற்றத்தில் எம்முடனிணைந்துள்ள கத்தோலிக்க சமய ஆசிரியரான திருமதி. A. தினேஷ் கத்தோலிக்க மன்றத்தைச் சிறப்பாக நடாத்தி வருகின்றார். இவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர் திரு. த. அன்பழகன், அவருடனிணைந்து செயற்படும் ஆசிரியர்களான திரு. க. ஹம்சன், திருமதி. த. உதயரூபன், திருமதி. ச. பிரதீபன் ஆகியோரது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதோடு தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரிட்சையில் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளை மாணவர்கள் பெறுவதற்காக அயராதுழைத்த ஆசிரியரான திரு. க. ஹம்சன் அவர்களை மனதாரப்பாராட்டுகின்றேன். கத்தோலிக்க சமய ஆசிரியரான திருமதி. O. சுகிர்தன் அவர்கள் தனது பாடத்துறைக்கு மேலதிகமாக நூலகத்தைப்

பொறுப்பேற்று நன்கு பரிபாலித்து வருகின்றார். இவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

அத்துடன் தொண்டராசிரியராகக் கடமையாற்றும் செல்வி. S. சோபிகா அலுவலகக் கடமைகளில் எனக்கு உறுதுணையாகக் கடமையாற்றுகின்றார். விரைவில் நிரந்தர நியமனம் கிடைக்க வாழ்த்துகின்றேன். பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் என்னோடு தோள் கொடுத்துதவும் பாடசாலைப் பணியாளர் திரு. ப. லக்ஸ்மன் அவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

## ஆசிரிய மாணவ செயற்பாடுகள்

தற்பொழுது எமது வித்தியாலயத்தில் 28 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இவர்களில் மூவர், மூன்று நாட்கள் எமது வித்தியாலயத்திற்கு வருகைதரும் பகுதி நேர ஆசிரியர்கள் ஆவர். கல்வித் திணைக்களத்தின் இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியரான வண. இ. வாசுதேசன் அவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய பணிகளைப் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு இவர் சென்ற பாடசாலையில் இவரது பணி சிறக்க இறையாசியை வேண்டுகின்றேன்.

கடந்த பல வருடங்களாக எமது வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

இனி எமது வித்தியாலயத்தில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்களான திருமதி. S. றமேஷ், திருமதி. G. ஜெகநாதன், திருமதி. O. சுகிர்தன் ஆகியோரை அன்புடன் வரவேற்பதோடு இவர்களது அர்ப்பணிப்பான சேவையை எதிர்பார்த்து நிற்கின்றேன். அத்துடன் எமது வித்தியாலயத்திற்குப் புதிதாக காவலாளியாக இணைந்த திரு. S. சண்முகசுந்தரம் அவர்களையும் வரவேற்கின்றேன்.

எமது வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சுமார் 230 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதார நிலையில் பின்தங்கிய வர்களாகவே காணப்படுகின்றனர். தாய் தந்தையரை இழந்த மாணவர்கள்,

தாய் தந்தை இருவரும் கூலி வேலைக்குச் செல்லும் வகையான மாணவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் அதிகம் காணப்படுகின்றனர்.

மாணவர்களுக்கு EKSP திட்டத்தின் மூலம் கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் அனுசரணையுடன் முறையான நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் போஷணை மிக்க உணவைப் பெறுகின்றனர். மதிய உணவுத் தயாரிப்பில் ஈடுபடும் திருமதி. பவானி அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். மாணவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கு முகமாக வங்கிச் சேவை நடைமுறையில் உள்ளது.

பொதுச்சுகாதார பரிசோதகர் அவர்களால் வைத்தியரின் உதவியுடன் மாணவர்களுக்கு உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறை நிவர்த்தி நடைபெறிகன்றது. பொதுச்சுகாதார பரிசோதகர் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

வருடந்தோறும் இல்ல மெய்வன்மைப் போட்டி பரிசளிப்பு விழா, நவராத்திரி விழா, ஒளிவிழா என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் சோமசுந்தரப் புலவர் வாழ்ந்த ஊர் என்ற பெருமையுடன் ஆடிப்பிறப்பு விழா மகிவும் சிறப்பாக நடைபெறுகின்றது. வராந்தோறும் ாமணவர் மன்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. பொருத்தமான விளையாட்டு மைதானம் இல்லாத போதும் தமது விளையாட்டுத்திறனை வெளிப்படுத்தும் மாணவர்களைப் பாராட்டுகின்றேன். கோட்ட, வலய, மாவட்ட, மாகாண நிலைகளில்மாணவர்கள் வெற்றி பெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் செல்வன். த. டிதூசனன் என்ற மாணவனும் ஈட்டி எறிதலில் செல்வன். வி. வினுசன் என்ற மாணவனும், உயரம் பாய்தலில் யோ. நிசாந்தினியும் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றினர். செல்வன். வி. வினுசன் நடைபெற இருக்கும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மாணவர்களையும் இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி. S. பிரபதாஜ் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

அத்துடன் ஆங்கில தினப் போட்டியில் செல்வி. பு. ரம்மியா என்பவர் Solo Acting போட்டியில் மாகாண மட்டத்தில் பங்குபற்றினார்.

இம்மாணவியையும் இவரைப் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி. R. ஈஸ்வரன் அவர்களையும் பாராட்டுகின்றேன். உரிய காலத்தில் மாணவர் தேசிய அடையாள அட்டை பெறுவதற்குஆவன செய்யும் ஆசிரியரான திரு. C. N. விக்னேஸ்வரன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியை அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களான செல்வன். சு. டுசாந், செல்வி. ர. துஷானி, செல்வன். நிரோஜன் ஆகியோரையும் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியரான திரு. க. ஹம்சன் அவர்களையும் ஏனைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினரின் உதவியுடன் ஆரம்ப சுற்றாடல் முன்னோடிக்குழு மஞ்சள் சின்னத்தையும், இரண்டாவதாக தொப்பியையும் (தரம் 8, 9ல் 25 மாணவர்கள்) பெற்றமை பாராட்டுக்குரியது.

க.பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரம் கற்கும் மாணவர்களான ப. லவனிதா, த. தனுசியன், வி. சங்கீதா, ம. ஷாலினி, வி. சஜிரா, சா. பொபிற்றா லுவின்சியா, சி. பிரகாசினி, சி. தினேசினி, உ. துஷ்யந்தி, க. தனுசியா, பி. சாதுஜா, ந. தர்சிகா ஆகியோரைப் பாராட்டுவதோடு இவர்களது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகத்திற்கு தெரிவான ஜெ. துலக்ஷன் பு. கோபிஷாந் ஆகியோரையும் வாழ்த்துகின்றேன்.

எமது வித்தியாலயத்தில் ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியரான திரு. S. ஜெயானந்தன் அவர்கள் எமது வித்தியாலயத்திற்கு வருகை தந்து சகல செயற்பாடுகளிலும் உறுதுணையாக இருப்பதோடு மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விண்ணப்பம் அனுப்புவதிலும் துணை புரிந்து வருகின்றார். அத்துடன் விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கும் உதவி புரிந்து வருகின்றார். இவருக்கும் எனது நன்றியும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

எமது வித்தியாலய S.D.C. செயலாளர் திரு. பகீரதன் அவர்கள் தாமாக முன்வந்து பாடசாலைச் செயற்பாடுகளுக்குத் துணை புரிந்து வருகின்றார். இவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றேன். அத்துடன் S.D.C. உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள். பெற்றோரிடம் அன்பளிப்புக்களைப் பெற உதவிய திருமதி. த. மஞ்சுளாதேவி அவர்களுக்கும் நன்றியையும் கூறிக் கொள்கின்றேன்.

அடுத்து வருடந்தோறும் நடைபெறும் பரிசில் தினத்தின் போது க.பொ.த. (சா/த) பரீட்சையில் முதன்நிலைப் பெறுபேற்றினைப் பெறும் மாணவருக்குத் துவிச்சக்கரவண்டியும் இரண்டாம் நிலைப்பெறுபேற்றினைப் பெறும் மாணவருக்கு 5000/- ரூபாவும் மூன்றாம் நிலையில் உள்ளவருக்கு 3000/- ரூபாவும் க.பொ.த. (உ/த) சித்திபெற்றவர்களுக்கும் பணப்பரிசில்களை வழங்கி மாணவர்களை ஊக்குவிக்கின்ற தேவசுலோஜனா நிதியத்தினரான மதிப்புக்குரிய திரு. திருமதி. சந்திரசேகரம் குடும்பத்தினரைப் பாராட்டுவதுடன் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது வித்தியாலய வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து வரும் பாடசாலை மேம்பாட்டுக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எமது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வருவதுடன் சகல விடயங்களிலும் துணை நின்று உதவி புரிந்துவரும் வலிகாமம் வலயக்கல்வித் திணைக்களத்தினருக்கும் வேண்டிய போது ஆலோசனைகள் வழங்கி ஊக்குவிக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் குடும்ப மட்டப் போட்டிகள் செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய குடும்பப் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மேலும் இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினர் அவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்கள், நிறுவுனர் நினைவுப் பேருரையாளர், கௌரவ விருந்தினர் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

நிறைவாக அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே எமது வித்தியாலயத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்ய உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்து இன்றைய பரிசில் தின விழாவுக்கு வருகைதந்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி

அதிபர்

த. மாதவன்

# அன்பளிப்புகள் வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர்கள் - நவாலி ம.வி. | ரூபா. 14000/- |
| 2. | திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி (ஓய்வுபெற்ற பிரதிஅதிபர்) | ரூபா. 1000/- |
| 3. | திரு. தயாபரன் | ரூபா. 2000/- |
| 4. | திரு. ப. திருச்செல்வம் | ரூபா. 500/- |
| 5. | திரு. ரகுசீலன் | ரூபா. 500/- |
| 6. | திரு. க. புஸ்பதேவன் | ரூபா. 500/- |
| 7. | திரு. விஜயன் | ரூபா. 500/- |
| 8. | திரு. த. புஸ்பராசா | ரூபா. 1000/- |
| 9. | திரு. சத்தியதாசன் | ரூபா. 500/- |
| 10. | திரு. இ. பகீரதன் | ரூபா. 2000/- |
| 11. | திரு. றொபேட் | ரூபா. 1000/- |
| 12. | திருமதி. செ. கிருபாஜினி | ரூபா. 1000/- |
| 13. | திருமதி. க. ஜெயகோபி | ரூபா. 2000/- |
| 14. | திரு. சி. ஜோண் பிராங்லின் | ரூபா. 1000/- |
| 15. | திருமதி. செ. மணிசேகரன் (ஆசிரியர்) | ரூபா. 1000/- |
| 16. | திருமதி. வி. கோகுலானந்தன் (ஆசிரியர்) | ரூபா. 500/- |
| 17. | திருமதி. ஆ. பிலிப் லியோனாட் (ஆசிரியர்) | ரூபா. 500/- |
| 18. | திரு. ரவீந்திரன் கவிவர்ணன் | ரூபா. 1000/- |
| 19. | திரு. இ. உதயசூரியன் | ரூபா. 1000/- |
| 20. | திரு. இ. சுதாகரன் (தேவன் கடை) | ரூபா. 1000/- |
| 21. | திருமதி. து. வசந்தகுமாரி | ரூபா. 1000/- |
| 22. | திரு. க. சுதாகர் | ரூபா. 1500/- |
| 23. | திரு. இ. நடராஜா | ரூபா. 2000/- |
| 24. | திரு. மோகன்ராஜ் | டொங்கிள் - 01 |
| 25. | திருமதி. அ. விஜயகாந்தி<br>(கணவர் S. அரியம் ஞாபகார்த்தமாக) | ரூபா. 1000/- |

# 2015ஆம் ஆண்டுக்கான பரிசு பெறுவோர் விபரம்

## பாடரீதியாக முதல் இடங்களைப் பெறும் மாணவர்களது விபரங்கள்

### தரம் 1

1. மோ. டெனிஸ்ரன் - தமிழ், கணிதம், சமயம்
2. க. துர்க்கா - சுற்றாடல், சொல்வதெழுதுதல், சமயம், வரவு ஒழுங்கு.

### தரம் 2

1. சு. நிதர்சன் - தமிழ், சுற்றாடல், சமயம், சொல்வதெழுதுதல், வரவு ஒழுங்கு.
2. செ. சாஜித்தியன் - கணிதம்

### தரம் 3

1. ப. துசாயினி - தமிழ், சமயம், சுற்றாடல், வரவு ஒழுங்கு
2. கு. தனுஜன் - கணிதம், சுற்றாடல்
3. லோ. தனுஜன் - ஆங்கிலம்

### தரம் 4

1. து. டுசாந் - தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், வரவு ஒழுங்கு
2. ர. துசானி - கணிதம்

### தரம் 5

1. உ. வசிகரன் - தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் N.RC, வரவு ஒழுங்கு
2. சி. டிலோஜன் - சைவசமயம், கணிதம்

**தரம் 6**

1. பா. அகல்யா - தமிழ், சமயம், ஆங்கிலம், புவியியல், குடியுரிமை, விஞ்ஞானம்,தொ.நுட்பம், சுகாதாரம், நடனம், வரவு ஒழுங்கு
2. உ. கிந்துசா - சங்கீதம்
3. ர. பவிசன் - சித்திரம்
4. சா. சஜீவன் - சமயம் R.C

**தரம் 7**

1. த. ஸதூசனன் - ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம், சங்கீதம், செய்முறை தொழில்நுட்பம், சமயம் N.RC
2. தி. டர்ஷிகா - தமிழ், கணிதம், புவியியல், குடியுரிமை, நடனம், சுகாதாரம், சைவசமயம், வரவு ஒழுங்கு.
3. லதிஸ்கரன் - சித்திரம்

**தரம் 8**

1. ட. மேரிடில்சியா - சமயம் RC, தமிழ், சங்கீதம், P.T.S., சுகாதாரம்
2. செ. லோஜிதா - சைவசமயம், விஞ்ஞானம், வரலாறு, நடனம்
3. து. பிருந்தா - புவியியல், ஆங்கிலம், குடியுரிமை
4. செ. தர்சன் - கணிதம், சித்திரம்
5. ம. குயாயினி - வரவு ஒழுங்கு

**தரம் 9**

1. து. தர்சன் - கணிதம், ஆங்கிலம், சுகாதாரம், சமயம், குடியுரிமை, புவியியல்
2. பு. ரம்மியா - தமிழ், சங்கீதம், விஞ்ஞானம், வரவு ஒழுங்கு
3. டொமினிக் - சமயம் (RC)

4. சஸ்மிதா - நடனம்
5. நிதர்சன் - சித்திரம்

**தரம் 10**

1. செ. சஞ்சீவன் - சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சித்திரம், விவசாயம்
2. பு. லக்சனா - வரலாறு, நடனம், சுகாதாரம், புவியியல்
3. க. கபீஸ்கரன் - ஆங்கிலம், வணிகக்கல்வி
4. வி. வினுசன் - சமயம் RC
5. பி. கோகுலன் - சங்கீதம்
6. சு. துஷாந்தினி - மனைப்பொருளியல்
7. ச. கலைமகள் - வரவு ஒழுங்கு

**தரம் 11 – க. பொ. த [சா/த]**

1. ம. ஸாலினி - சமயம், தமிழ்
2. வி. சங்கீதா - கணிதம், ஆங்கிலம், வணிகம், சங்கீதம்
3. வி. சஜிரா - வரலாறு, விஞ்ஞானம்,புவியியல், நடனம், விவசாயம்
4. ந. தர்சிகா - மனைப்பொருளியல்
5. வி. லவீனன் - ICT
6. சி. பிரகாசினி - சுகாதாரம்
7. ஆ. செந்தூரன் - சித்திரம்
8. சா. பொயிற்றாலூவின்சியா - சமயம் RC
9. பி. நிருசியா - வரவு ஒழுங்கு

**தரம் 12 – க. பொ. த [உ/த]**

1. த. அருண்குமார் - பொருளியல், கிறிஸ்தவ நாகரிகம், அரசறிவியல், ஆங்கிலம்

| | | | |
|---|---|---|---|
| 2. | வி. ஆன்சகினா | - | தமிழ், புவியியல், பொதுச் சாதாரண பரீட்சை |
| 3. | க. பிரியடிலக்ஷி | - | இந்துநாகரிகம் |
| 4. | யோ. நிஷாந்தினி | - | தகவல் தொழில்நுட்பம், வரவு ஒழுங்கு |

**தரம் 13 – க. பொ. த [உ/த]**

| | | | |
|---|---|---|---|
| 1. | உ. டயானந்தராஜ் | - | இந்துநாகரிகம், தமிழ், பொதுச்சாதாரண பரீட்சை, வரவு ஒழுங்கு |
| 2. | த. வக்சலா | - | சங்கீதம், ஆங்கிலம் |
| 3. | ஜெ. சுஜிந்தன் | - | தகவல் தொழில்நுட்பம் |
| 4. | லி. டயானா | - | புவியியல் |

# மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள்

## கோட்ட, வலய, மாவட்டப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றோர் விபரம்

| பெயர் | நிகழ்வு | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|
| 1. யோ. நிசாந்தினி | உயரம் | 1ம் இடம் | 1ம் இடம் | |
| 2. த. டிதூசனன் | நீளம் | 1ம் இடம் | 2ம் இடம் | |
| 3. தனுஜா | 100m | 2ம் இடம் | - | |
| 4. K. சா்மிகா | 200m | 1ம் இடம் | - | |
| 5. V. விநுசன் | முப்பாய்ச்சல் | 2ம் இடம் | - | |
| 6. த. டிதூசனன் | முப்பாய்ச்சல் | 1ம் இடம் | 1ம் இடம் | |

## பெரு விளையாட்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | கபடி | 19 வயதுப் பெண்கள் | வலயம் 3ம் இடம் |

## ஆங்கில தினப் போட்டி

| | | | இடம் | | |
|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாகாணம் |
| 1. | பு. ரம்மியா<br>கி. சிந்துஜா<br>சி. பிருந்துவி<br>ச. வினோபா<br>து. தர்சன் | Role Play | 1ம் இடம் | 3ம் இடம் | - |
| 2. | பு. றம்மியா | Solo Acting | 1ம் இடம் | 1ம் இடம் | பங்குபற்றியது |

## வணிகப் போட்டி

| | | | இடம் | | |
|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாகாணம் |
| 1. | பு. றம்மியா | கட்டுரை | 2ம் இடம் | | |

## தமிழ்மொழித்தினப் போட்டி

| | | | இடம் | | |
|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாகாணம் |
| 1. | உ. டயானந்தராஜ் | திறனாய்வு | 3ம் இடம் | | |

## தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை அண்மித்தோர்

1. சு. டுசாந்
2. ர. துசானி
3. வி. நிறோஜன்
4. தே. மதுசன்
5. லி. டியோனி

## தேவசுலோசனா நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள்

பரீட்சைப் பெறுபேறுகள், பாடசாலைச் செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு முதல் மூன்று நிலைகளில் பரிசில் பெறுவோர் விபரம்

க.பொ.த. (சா/தரம்) 2015

| | | | பரிசில் |
|---|---|---|---|
| 1. | முதல் நிலை | பகீரதன் லவனிதா | துவிச்சக்கரவண்டி |
| 2. | இரண்டாம்நிலை | தனுராஜ் தனுசியன் | ரூபா 3000/- |
| 3. | மூன்றாம் நிலை | சங்கீதா விநாயகமூர்த்தி | ரூபா 3000/- |

க.பொ.த. (உ/தரம்) 2015 - பல்கலைக்கழக அனுமதி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜெயகோபி துலக்ஷன் | A 2B | ரூபா 4000/- |
| 2. | புலேந்திரராசா கோபிஷாந் | A 2C | ரூபா 4000/- |

கர்நாடக சங்கீத பாடத்தில் முதன்மை பெற்ற மாணவர்களான

**செல்வன். பு. கோபிஷாந்**

**செல்வி. ந. தர்சிகா**

ஆகியோருக்கு பழைய மாணவி திருமதி. சஜீவி குமரன் அவர்கள் தந்தையார் அமரர் இராசையா ஞாபகார்த்தமாக வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

நன்றி.

# J/ NAVALY MAHA VIDYALAYAM

## Academic Staff - 2016

| No. Name | Grade | Qualification |
|---|---|---|
| 1. Mr.T.Mathavan (Principal) | SLPS - 2-I | Dip. in School Management |
| 2. Mr. S.Nethaji | SLPS - III | Dip.in.Edu. B.FA Art |
| 3. Mrs.K.Raveendran | SLTS - I | (Dep. Pri.) B.FA,Spe.Trd.Music |
| 4. Mrs.S.Rajasekaram | SLTS - I | B.A .Dip.in.Edu. Tamil Trd |
| 5. Mrs.R.S.Sivabalan | SLTS - I | Spe.Trd.in.Home Ecco. |
| 6. Mr.C.N.Vigneswaran | SLTS - I | B.A .Dip.in.Edu, Spe.Trd.in.Com |
| 7. Mr.E.Manmatharajan | SLTS - I | B.A. Dip.in.Edu. |
| 8. Mrs. S. Ramesh | SLTS - 2-I | B.Sc, PGDE. M.Ed. |
| 9. Mrs. S.Ananthakumar | SLTS - 2-I | Councilor, Pimary Trd. |
| 10. Mrs.R.Easwaran | SLTS - 2-II | Spe.Trd.in.English |
| 11. Mrs. N.Thanaranjan | SLTS - 2-II | Traine (Sc), Delic. Trd. Eng |
| 12. Mrs.J.Senthuran | SLTS - 2-II | B.A(Hons). Dip.in.Edu |
| 13. Mrs.S.Pratheepan | SLTS - 2-II | Dip in Teaching College |
| 14. Mrs.T.Uthayaruban | SLTS - 2-II | Dip in Teaching College |
| 15. Mr.K.Hamsan | SLTS - 2-II | Dip in Teaching B.A. |
| 16. Mrs. S.Prapathaj | SLTS - 2-II | Dip in Teaching |
| 17. Mrs.S. Anantharaj | SLTS - 2-II | B.B.A. (Hons) |
| 18. Mr.T.Balakumar | SLTS - 2-II | B.Ed.Spe.Trd.in.Agri |
| 19. Mr.T.Paraparan | SLTS - 2-II | B.Sc, M.Sc Dip.in.Edu. |
| 20. Mrs.P.Pattric Gunaseelan | SLTS - 2-II | B.A, Dip in Edu. |
| 21. Mrs.M.Manokaran | SLTS - 2-II | B.A. Degree in Edu.Dance |
| 22. Mrs.S.Vijayaneshan | SLTS - 2-II | B.Sc, PGDE |
| 23. Mrs. G. Jeganathan | SLTS - 2-II | B.Fa. PGDE |
| 24. Mr.N.Gopalakrishnan | SLTS - 3-I | B.A. (Hons) PGDE, Maintan |
| 25. Mr.T.Anpalakan | SLTS - 3-I | Teaching College Primary |
| 26. Mrs. A. Gonxtyin Denesh | SLTS - 3-I | |
| 27. Mrs. O. Sujirthan | SLTS - 3-I | A/L Dip.in.teaching College |

## Non Academic Staff

Mr. Luxman Paulin - Sch Lab III (A/L (NOAT))
Mrs. S. Sellan - Watcher-II (O/L)

## Welwisher

Miss. S. Sobika

# கல்லூரி கீதம்




எங்கள் நவாலி மகா வித்தியாலயம்
என்றென்றும் வாழிய வாழியவே
பொங்கும் கலை கல்வி புத்தமதூற்றில்
பூதலம் ஏற்றிட வாழியவே

(எங்கள் நவாலி)

எத்தனை கல்விகள் எவ்வெத் தொழில்வகை
எத்தனை ஞானமிப் பாரிலுண்டோ
அத்தனை கல்விகள் அத்தனை நற்றொழில்
ஆர்த்திடும் ஞானமமர்ந் தோங்குகவே!

(எங்கள் நவாலி)

உத்தம நற்குரு ஆசிரியர் பணி
ஊக்க மிகுந்திடும் மாணவர்கள்
நித்தம் வளர்ந்திட நித்தம் பகர்ந்திட
நின்று நிலைத்தென்றும் வாழியவே!

(எங்கள் நவாலி)

நல்ல நவாலி மகான்கள் முதன்முதல்
நாட்டிய பள்ளியில் நாம் பயில்வோம்
நல்ல புரிந்திட நல்ல உரைத்திட
நின்று நிலைத்திட வாழியவே!

(எங்கள் நவாலி)

ஒற்றுமையாய் அதிபர் குருமாருடன்
உத்தம மாணவர் பெற்றவராய்
மற்றைய ஊர்களும் தேசங்களும் மெத்த
வானிமிர்ந் தோங்குக வாழியவே!

(எங்கள் நவாலி)



றூபன் பிறிண்டேர்ஸ். ஆனைக்கோட்டைச் சந்தி. *T.P 021 225 5566*